# 7-வது ஊதியக்குழுவில் ரயில்வே அதிகாரி இடம்பெற வேண்டும்: தொழில்நுட்ப மேற்பார்வையாளர் சங்க தேசியப் பொதுச்செயலர் வலியுறுத்தல்

27.10.2013




நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

ஏழாவது ஊதியக்குழுவில் ரயில்வே அதிகாரி ஒருவரை இடம்பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய ரயில்வே தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் சங்க தேசியப் பொதுச்செயலர் எம்.சண்முகம் வலியுறுத்தினார்.

ஈரோடு-சென்னிமலை சாலையில் உள்ள ரயில்வே பணிமனை முன்பு சனிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வந்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

7-வது ஊதியக்குழுவை மத்திய அரசு சில வாரங்களுக்கு முன்பு அறிவித்துள்ளது. ஏற்கெனவே 6-வது ஊதியக்குழுவில் ரயில்வே தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு ஊதிய முரண்பாடுகள் உள்ளன. இது குறித்து பலமுறை வலியுறுத்தியும் இதுவரை முரண்பாடுகள் களையப்படவில்லை.எனவே, 7-வது ஊதியக்குழுவில், 6-வது ஊதியக்குழுவின் முரண்பாடுகளை களைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓடும் தொழிலாளர்களுக்கு ஓடும் படி வழங்குவது போல, தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பராமரிப்புப் படி வழங்க வேண்டும்.ரயில்வே துறையில் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களாக டிப்ளமோ, பொறியாளர் படித்தவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு முதுநிலை தொழில்நுட்ப மேற்பார்வையாளர் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

அதேநேரத்தில் ஐடிஐ படித்துவிட்டு ஓடும் தொழிலாளராக பணியில் சேருவோர், குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப்பின்னர் முதுநிலை தொழில்நுட்பப் மேற்பார்வையாளர்களுக்கு அதிகாரிகளாக மாறிவிடுகின்றனர். அதேநேரத்தில் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களாக சேருவோர் பல ஆண்டு காலம் பதவி உயர்வு இன்றியும், ஐடிஐ படித்த அதிகாரிகளுக்கு கீழும் பணியாற்ற வேண்டிய அவல நிலை உள்ளது.எனவே, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு உரிய பதவி உயர்வு கிடைக்கவும், ஐடிஐ படித்தவர்களின் கீழ் பணியாற்றக்கூடிய அவலத்தையும் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரயில்வே துறையில் டிப்ளமோ, பொறியியல் படித்துவிட்டு தொழில்நுட்ப மேற்பார்வையாளராக பணியாற்றுவோருக்கு பதவி நிலை ஊதியமாக (கிரேடு பே) ரூ.4,200-ம், முதுநிலை மேற்பார்வையாளர்களுக்கு ரூ.4,600-ம் இப்போது வழங்கப்படுகிறது. இதை ரூ.4,600, ரூ.5,400 ஆக உயர்த்த வேண்டும். 7-வது ஊதியக்குழுவில் ரயில்வே அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும். அப்போது தான் ரயில்வே தொடர்பான ஊழியர்கள், அதிகாரிகளின் குறைகளை அவர்களால் கண்டறிந்து அமல்படுத்த முடியும் என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் இணைச் பொதுச்செயலர் கே.வி.ரமேஷ், சேலம் கோட்டச்செயலர் ஜெரோம், ஈரோடு கிளைத் தலைவர் பி.பிரனீத் உள்பட பலர் பங்கேற்றனர்.

# IRTSA holds Gate Meeting at Erode Diesel Loco Shed

**IRTSA organised lunch hour gate meeting in front of Diesel Loco Shed, Erode, Southern Railway to draw the attention of Government on the following demands**

1. **Government should clear all the anomalies arisen after the implementation of Sixth Central Pay Commission. (Grant of Rs.4800 Grade Pay to Junior Engineer / Depot Material Superintendent / Chemical & Metallurgical Assistant and Grant of Rs.5400 Grade Pay to Senior Section Engineer / Chief Depot Material Superintendent / Chemical & Metallurgical Superintendent / Senior Engineer (IT), etc)**
2. **Implementation of accepted recommendations of Fifth & Sixth Pay Commission, which are not implemented so far. (Grant of Group-B status to SSE/CDMA/ CMS/Sr.Er/IT, Exemption of all allowances from income tax, etc).**
3. **To grant interim relief till the time the recommendations of the 7th Pay Commission are made and accepted by the Government.**
4. **To make the Government as Model Employer, through appropriate Pay Package for its employees through job evaluation - duly considering all related Factors - including the relative Job requirements/Difficulties, Qualifications, Training, Working Conditions, Duties, Responsibilities and Accountabilities etc**
5. **One of the 7th Pay Commission member should be serving Technical Member from Railway Board to make exclusive study about Railway Employees.**
6. **Motivation by Special Pay & Allowances based on the performances to open line, shed & depot technical staff and technical supervisors.**
7. **Elimination of undue advantage given to running staff during the selection to Group-B in the Mechanical and Electrical Departments by withdrawing the Railway Board's order RBE No: 53 / 2011 dated 25.04.2011, and the Integrated Seniority be considered for same Grade Pay for Running Staff as for the Stationary Staff including Technical Supervisors - for selection for promotion from group C to Group B**










